**பாணந்துறை நகர சபை**

**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 சனவரி 13 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாணந்துறை நகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையால் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 9,343,929 தொகைக்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 91,471 இற்காக மாத்திரமே ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வேலைகளுக்காக பெறவேண்டிய மூலதன மானியம் ரூபா 8,285,007 ஆன போதிலும் ரூபா 2,500,896 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,040,432 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,817,618 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 40,646,806 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரியும் வரியும் | 45,113 | 27,330 | 24,861 |
| (ii) | வாடகை | 2,580 | 2,166 | 4,806 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 266 | 266 | 222 |

**2.2.2 வீதவரி**

(அ) 2012 நவம்பர் 31 ஆம் திகதி நிலவிய நிலுவை வீதவரி மீதியில் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட 0 – 1 வருடங்களுக்கான ரூபா 2,196,537 தொகையும், 2 முதல் 5 வருடங்களுக்கிடையே ரூபா 1,738,467 தொகையும், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 449,313 தொகையும் 2013 நவம்பர் 25 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டன.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவு இல. 02 இல் மாத்திரம் நிலவிய நிலுவை வீதவரி மீதியில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவை மீதிகள் 13 ஆல் ரூபா 384,193 தொகையான நிலுவை காணப்பட்டது.

(இ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவிய நிலுவை வீதவரி மீதியில் 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் ரூபா 11,561,151 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் மேலும் ரூபா 12,828,166 தொகையான நிலுவை மீதி நிலவியது.

**2.2.3 ஏனைய வருமானம்**

(அ) சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையில் பதிவாகியிருந்த ஓர் நிறுவனத்தால் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 164(2) ஆம் பிரிவின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றுலா ஹொட்டேல்களில் இருந்து அறவிடப்பட்டிருந்த வருமானம் அந்நிறுவனங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த விபரத்தின் அடிப்படையில் மாத்திரம் வருமானம் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்பட்டிருந்ததுடன் உள்ளபடியாக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய வருமானம் எவ்வளவு என்பது குறித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் இரு சிற்றுண்டிச்சாலையில் இருந்து 2012 ஆம் ஆண்டின் அவற்றின் பெறுவனவு அடிப்படையில் அதிகாரசபை

அறவிடப்பட்டிருந்த 1 சதவீத வருமானம் ரூபா 31,109 ஆன போதிலும் சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த 1 சதவீத வருமானம் ரூபா 6,966 ஆகக் காணப்பட்டது.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம்**

(அ) பொது நல சுகாதார பரிசோதகர் ஒருவர் தமது வலயத்திலிருந்து ஒரு மாதத்திற்கு ஆகக் குறைந்தது 2 உணவு மாதிரிகளையேனும் பரீட்சிக்க வேண்டிய போதிலும் 2012 மே 07 ஆம் திகதி ஒரு வியாபார நிலையத்திலிருந்து மாத்திரம் உணவு மாதிரி பெற்றுக்கொள்ளப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2013 சனவரி 21 ஆம் திகதி வரையிலும் அறிக்கையைத் தருவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உணவு மாதிரி தொடர்பாக தொடரப்பட்டிருந்த வழக்கிற்கான தண்டப்பணமாக 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 68,000 தொகையான பணம் நீதிமன்றத்தால் அறவிடப்பட்டிருந்த போதிலும் இதில் சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டிய 75 சதவீத அளவான ரூபா 51,000 தொகையான பணம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**2.3 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்**

1998 ஒக்டோபர் 12 ஆம் திகதிய 3/2/3/4/2 ஆம் இலக்க மேல்மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனக் கொள்வனவிற்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 3 வாகனங்களுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 ஊழியர் கடன்**

(அ) பல வருட காலமாக முன்கொண்டு வரப்படுகின்ற சேவையை விட்டுச் சென்ற, ஓய்வு பெற்ற, மரணித்த மற்றும் சேவையிலிருந்து இடமாற்றம்

பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,453,345 தொகையான கடன் மீதி 2012 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 534,074 தொகையான இனங்காணப்படாத ஊழியர் கடன் மீதி காணப்பட்டது.

**2.5 செயற்பாட்டு திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1990 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,112,885 தொகையான முற்பணம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 முதல் 2010 வரையான காலப்பகுதிக்குரித்தான ரூபா 7,135,885 தொகையான காலாவதியான வைப்பு மீதிகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கோ இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் கணக்காய்வுத் தினமாகிய 2013 ஜுன் 10 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 6 வருமான விடயங்களின் 21 சதவீதத்திலிருந்து 339 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் கண்டறியப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

**2.6 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 128,132,134 மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை டபிள்யூபீ/எல்ஜீடீ/10/2008 மற்றும் 2008 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய சுற்றறிக்கை அறிவுறுத்தலின் படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) பாதீடு